ஒன்று கூடுவோம் வெற்றி பெறுவோம்

Regn. No. 2924 of 2000

# LIFE INSURANCE AGENTS FEDERATION OF INDIA

Regd. No. 2924/2000

**Ranvir Sharma**
National President

**N.P. Subramaniyam**
President - Southern Zone

**B. Markandeyulu**
Secretary General

**Rtn. J.K.N. Palani**
Secretary - Southern Zone

**அறிந்து கொள்வோம் நமது LIAFI யின் சாதனை பற்றி**
**நினைவில் கொள்வோம் அது பெற்றுத் தந்த சலுகைகளை**

## AGENTS GRATUITY - Rs. 5,00,000/- ★ GROUP INSURANCE - Rs. 15,00,000/-

1. வைரவிழா கண்ட நிறுவனத்தில் வைர விழா காணப்போகும் நமது சங்கத்தின் நிறுவன நாள் 2 அக்டோபர் 1964. (LIAFI FORMATION DAY) முதல் தலைவர் காலஞ்சென்ற J. முத்பத்ரி அவர்கள்
2. ஜனவரி 24, 1945 நாடு முழுவதும் உள்ள முகவர்கள், முகவர்களின் உரிமையை நிலைநாட்ட காலஞ்சென்ற முகவர் திரு. சம்சத் அலி அவர்கள் தலைமையில் கொல்கத்தா நகரில் ஒன்று கூடினர். ஒவ்வொரு வருடமும் அந்த நாள் ஜனவரி 24 முகவர் தொழில் முறை பாதுகாப்பு நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. (Agent's Profession Protection Day i.e. App Day Every year 24th January)
3. Agents Regulations 1972 - முகவர்களுக்கான வரைமுறை சட்டம் இயற்றியது உலக அளவில் நமது நிறுவனம் மட்டுமே. இதனை கொண்டுவர முழு முயற்சியுடன் செயல்பட்ட முன்னாள் செயலாளர் காலஞ்சென்ற A.K. புர்காய்ஸ்த்தா அவர்களை நினைவு கொள்ள வேண்டும்.
4. முகவர் மன்றம், தொழில்முறை முகவர் திட்டம் (Career Agents System), CLIA கொண்டுவர போராடி வெற்றி பெற்றது LIAFI. கேரியர் ஏஜெண்டுகளுக்கு ஊக்கத்தொகை (Stipend) ரூ. 750/–லிருந்து 3000/- உயர்த்தி வாங்கிக் கொடுத்தது LIAFI
5. பொன்விழா கண்ட LIC நிறுவனம் நமது ஊழியர்களுக்கு மட்டும் தங்ககாசு கொடுத்த போது நீண்டகால முகவாண்மை செய்து வரும் முகவர்களுக்கும் கிடைக்க போராடி மன்ற முகவர்களுக்கு தங்ககாசு பெற்று தந்தது LIAFI.
6. **இயற்கை எய்தும் முகவர்களுக்கு குறைந்த பிரிமியத்தில், முகவாண்மை கால அடிப்படையில் குழுக்காப்பீட்டின் மூலம் அதிகபட்சமாக ரூ.12,00,000/- வரை இருந்ததை இப்போது ரூ.15,00,000/- வரை பெற்றுத் தந்தது. தற்பொழுது அதை ரூ.25,00,000/ – ஆக தர கோரிக்கை வைத்துள்ளோம். 69 வயது வரை மட்டும் உள்ள இந்த திட்டத்தை முகவர்களின் வாழ்நாள் வரை கொடுக்க வலியுறுத்தி உள்ளது LIAFI**
7. மன்ற உறுப்பினர்களுக்கான காப்பீடு

a. (Club Member Group Insurance) விபத்துக் காப்பீட்டுடன் சேர்த்து இரட்டிப்பாக கிடைக்க வலியுறுத்தி 65 வயது வரை மட்டுமே இருந்த இந்த திட்டத்தை 1.9.2013 முதல் 69 வயது வரை கிடைக்குமாறு பெற்றுத் தந்தது, LIAFI. அந்த தொகை இப்பொழுது Corp/ Club க்கு Rs. 8,00,000/-, Club Galaxy-Rs. 6,00,000/-, CM Club-Rs. 4,00,000/- ZM Club Rs. 2,00,000/-, DM Club- Rs. 1,10,000/-, BM Club- Rs. 55,000/- என உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகையை இரட்டிப்பாக்க போராடி வருகிறது LIAFI.

b. Increase in Group Insurance Cover for CLIA Brigade Members as follows

| | | |
|---|---|---|
| Silver Brigade - 10 Lakhs | Gold Brigade - 15 Lakhs | Diamond Brigade - 20 Lakhs |
| Platinum Brigade - 40 Lakhs | Super Platinum Brigade - 50 Lakhs | Star Platinum Brigade - 50 Lakhs |

8. மன்ற முகவர்களுக்கான மருத்துவ காப்பீடு (Mediclaim) கீழ்க்கண்டபடி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

a. வயது 85 வரை கிடைக்குமாறு செய்துள்ளது. இப்பொழுது கணவன் /மனைவியும் சேர்க்கப்பட்டுள்ளது.

b. 01.09.2012 முதல் Cashless மற்றும் Decentralised செய்யப்பட்டு, முகவர்கள் பயன் அடையும்படி செய்யப்பட்டுள்ளது.

c. இத்திட்டத்தில் ஏற்கனவே உள்ள நோய்களுக்கும் காப்பீடு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

d. பெண் முகவர்களுக்கு ஒரு சில விதிகளுக்குட்பட்டு பிரசவத்திற்கு காப்பீடு கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

e. அந்த தொகை இப்பொழுது Corp. Club க்கு Rs. 7,00,000/-, Club Galaxy Rs. 6,00,000/-, CM Club - Rs. 5,00,000/-, ZM Club - Rs.3,50,000/, DM Club Rs. 2,50,000/-, BM Club - Rs. 2,00,000/- என உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

9. **தகுதி உள்ள முகவர்களக்கு Gratuity 3 லட்சமாக இருந்ததை 5 லட்சமாக பெற்றுக் கொடுத்தது LIAFI. தற்பொழுது அதனை 20 லட்சமாக உயர்த்தி கொடுக்க LIAFI வலியுறுத்தி வருகிறது.**
10. வீடு கட்ட கடன் 40 லட்சம் வரை கிடைக்குமாறு LIAFI வாங்கி தந்தது. இரண்டாவது வீட்டுக்கடன் கிடைக்க போராடி வெற்றிக் கண்டது LIAFI அதிகபட்ச தொகையாக Corp,Club - Rs. 60,00,000/-, Club Galaxy-Rs. 50,00,000/-, CM Club- Rs. 40,00,000/- ZM Cub-Rs. 25,00,000/-, DM Club-Rs. 20,00,000/- என உயர்த்தப்பட்டுள்ளது.
11. வாகன கடன் (Vehicle Loan) அலுவலகம் அமைக்க (Office Loan) Festival Advance, ஆகியவற்றை உயர்த்தித் தர போராடி வெற்றி கண்டது LIAFI பண்டிகை முன் பணத்தொகை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென போராடி வெற்றி பெற்றோம். தற்பொழுது Corp,Club - Rs. 30,000/-, Club Galaxy-Rs. 22,000/-, CM Club- Rs. 20,000/- ZM Cub-Rs. 20,000/-, DM Club-Rs.20,000, BM Club-Rs. 15,000/- Others above 5 years Rs. 10,000/- and all others 7,000/- என உயர்த்தப்பட்டுள்ளது.
12. முகவர்களுக்கு கமிஷன் தரக்கூடாது என்று Swaroop Comittee அறிக்கையை எதிர்த்து தலைநகர் புதுடெல்லியில் லட்சக்கணக்கான முகவர்களை கூட்டி போராட்டம் நடத்தி பல MP களை பேச வைத்தும், மற்ற MP களுடன் தொடர்பு கொண்டும், அந்த அறிக்கை சட்டமாக நிறைவேற்றப்படாமல் தடுத்து நிறுத்தியது LIAFI.
13. பாலிசிதாரர் Paid up தொகையை 3 ஆண்டுகளில் இருந்து 2 ஆண்டுகளாக குறைக்க வேண்டி போராடி வாங்கி கொடுத்தது LIAFI .
14. அனைத்து கிளைகளிலும் முகவர்களுக்கென்று பிரத்யேக அறை கிடைக்கச் செய்தது LIAFI , CLIA Corner வாங்கி கொடுத்தது LIAFI.
15. முகவர்களின் கமிசன் தொகையிலிருந்து LIC பிரிமியத்தை பிடித்தம் செய்ய (SSS facility) போராடி வெற்றி கண்டது LIAFI.
16. IRDAI கொண்டு வந்த முகவர் வரைமுறைகளில் (AGENTS REGULATION) முகவர்களை பாதிக்கக் கூடிய அம்சங்களை நீக்க போராடி வெற்றிக் கண்டது LIAFI.
17. முகவர்களுக்கான வீட்டுக்கடன் வசதி பெற்ற முகவர்கள், நிலுவையிலுள்ள கடன் தொகைக்கு (Out Standing) கூடுதல் வட்டி செலுத்தாமல், செலுத்தப்படாத தவணைத் தொகைக்கு (Outstanding Installment ) மட்டும் வட்டி செலுத்தினால் போதும் எனப் போராடிப் பெற்றது LIAFI.

18. மன்ற முகவர்களுக்கான கூட்டத்திற்கு (Club Convention) செல்லும் போது பயணச் செலவு தொகையை அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்தது LIAFI. அந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேறு மாநிலத்தில் நடத்த வேண்டுமென போராடி வெற்றி பெற்றுத் தந்துள்ளது LIAFI

19. மன்ற முகவர்கள் கூட்டத்தில் (Club Convention) கலந்து கொள்ள முடியாதவர்கள் அதற்குண்டான தொகையை மாற்றுத் திட்டங்களின் மூலம் பெற்றுப் பயன் அடைய போராடி வெற்றி கண்டது LIAFI.

20. பயணப்படி /Daily Allowance அதிகம் பெற்றுத் தந்தது LIAFI.

21. தலைவர் மன்ற முகவர்களுக்கு கிடைக்கும் அலுவலக படியினை, அவரவர் வணிகத்திற்கு ஏற்ப அதிக தொகை கிடைக்க (Revision of club Rules Modification in Graded Benefits for high performing Chairman's Club Members) ஏற்பாடு செய்தது, அதனை அனைத்து மன்ற முகவர்களுக்கும் கிடைக்க போராடி வருகிறது LIAFI.

அலுவலக படியினை(Office Allowance)சென்ற ஒன்பது ஆண்டுகளாக செப்டம்பர் முதல் வாரத்தில் அனைத்து மன்ற முகவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தது LIAFI.

கணவர்/மனைவி இருவரும் மன்ற முகவர்களாக இருப்பின் இருவருக்கும் (Office Allowance) கொடுக்க வேண்டும் என போராடி பெற்று கொடுத்தது LIAFI. CM Club முகவர்களுக்கு Rs. 10,000/- ZM மன்ற முகவருக்கு Rs. 5,000/- மற்றும் DM மன்ற முகவருக்கு ரூ. 3,000./ - Computer Allowance பெற்று கொடுத்தது LIAFI.

22. Escalation Clause ஐ எடுக்க வேண்டும் எனப் போராடி, இந்த ஆண்டும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனை நிரந்தரமாக நீக்க போராடி வருகிறது LIAFI.

23. இடைவிடாத தொடர் முயற்சியினால் முகவர்கள், பாலிசிதாரர்களுக்காக செலுத்தும் மெடிக்கல் பரிசோதனை செலவுகளை முகவர்களுக்கே கொடுப்பதில் வெற்றி பெற்றுள்ளது.

24. மன்ற முகவர்களுக்கு கூடுதல் அலுவலக அலவன்சுகளை சேர்த்துக் கொடுப்பதிலும், பில்கள் மற்றும் வவுச்சர்கள் இல்லாமல் அலுவலக அலவன்ஸ் பெறுவதிலும் LIAFI தொடர் போரட்டங்கள் நடத்தி வெற்றி கண்டுள்ளது. மேலும் நினைவு பரிசுக்கான தொகையையும் கூட்டியுள்ளது. சங்கத்தின் இடைவிடாத தொடர் முயற்சியினால் சம்வர்தன் என்ற பென்ஷன் திட்டம் ரூ. 1,00,000/-க்கு மேல் கமிஷன் பெறும் முகவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து முழு திருப்தி LIAFI சங்கத்திற்கு இல்லை என்றாலும், இப்பென்ஷன் திட்டம் துவங்கப்பட்டதில் மகிழ்ச்சியே, மற்றும் சங்கம் இடைவிடாது இத்திட்டத்தை மேம்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

25. MGB (குறைந்த பட்ச உத்திரவாத வணிகம்)ல் மாற்றம் வேண்டும் என கோரிக்கை வைத்தோம். இப்பொழுது 12 Lives (or) 6 Lives & Rs. 50,000 or Rs. 1,00,000 Premium என LIC நிர்வாகம் அறிவித்துள்ளது.

26. சேவை வரியை எதிர்த்து 2014ல் 25,000 முகவர்களை ஒன்று திரட்டி சென்னையில் மாபெரும் ஊர்வலத்தை நடத்தி காட்டினோம். தொடர்ந்து GST நீக்க வலியுறுத்தி வருகிறது

27. கொரானா பாதிப்பில் இருந்து மீளும் வகையில் அனைத்து முகவர்களுக்கும் ரூ. 50,000/- வட்டியில்லா முன்பணம் பெற்றுத் தந்தது LIAFI.

28. அனைத்து முகவர்களுக்கும் விபத்துக் காப்பீடு ரூ. 2,00,000/- பெற்றுத் தந்தது LIAFI.

29. அனைத்து முகவர்களுக்கும் நிறுவனத்தின் அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தது LIAFI.

30. Premium Point ல் இரசீது ஒன்றுக்கு ரூ. 6/-ல் இருந்து ரூ. 10/- ஆக பெற்றுக் கொடுத்தது LIAFI.

31. 2014-ல் வெளியிட்ட இந்திய அரசின் அரசிதழில் (GAZETTE)-ல் நமது முகவர்களுக்கான Sec 44 (HRC and ERC) முற்றிலும் நீக்கப்பட்டது. இதை போராடி LIC யிடம் பெற்றுத் தந்தது LIAFI.

32. முகவர்களின் குழந்தைகளுக்கான கல்விக்கடன் போராடி பெற்றுத் தந்தது LIAFI.

33. முகவர்களுக்கான கட்டணமில்லா (Term Assurance) காலக்காப்பீட்டுத் தொகையின் வரம்பு, முன்பு ரூ. 3000/- முதல் ரூ. 10,000/- வரை மட்டுமே இருந்தது. தற்போது முகவர் இறப்பதற்கு முன் உடனடியாக 3 ஆண்டுகள் புதுப்பித்தல் கமிஷனின் சராசரியைப் பொறுத்து ரூ. 25,000/- முதல் ரூ. 1,50,000 வரை பெற்றுக் கொடுத்தது LIAFI.

34. பழைய ஏஜென்சியை இழந்து புதியதாக ஏஜென்சி எடுத்த முகவர்களுக்கு பழைய ஏஜென்சியில் செய்த வணிகத்தின் பிமியத்திற்கு கமிஷன் கொடுக்காமல் இருந்தது. இப்போது மீண்டும் நியமனம் செய்யப்பட்ட (Re-appointment) முகவர்களுக்கு தனது பழைய ஏஜென்சியின் புதுப்பித்தல் கமிஷனை பெற்றுக் கொடுத்தது LIAFI.

## பாலிசிதாரர்கள் பயனடைய வேண்டி நாம் வைத்துள்ள கோரிக்கைகள்

1. பாலிசிதாரர்களுக்கு போனஸ் உயர்த்தி கொடுக்கப்பட வேண்டும்.
2. பாலிசியின் மேல், பகுதி சரண்டர் கிடைக்க வலியுறுத்தி வருகிறது LIAFI.
3. சரண்டர் மதிப்பை உயர்த்தி கொடுக்குமாறு வலியுறுத்தி உள்ளோம்.
4. காலதாமதம் இல்லாமல் இனிய முகத்துடன் பாலிசிதாரர்களுக்கு சேவை செய்ய வேண்டுமென கேட்டுள்ளோம்.

## நிலுவையில் உள்ள LIAFI யின் கோரிக்கை

1. Enhancement of Group Insurance Coverage to all agents upto age 85
2. Uniform pension scheme with contribution by LIC
3. Escalation clause to be removed
4. Withdrawal of GST on Insurance Premium
5. Strengthening of CLIA channel
6. Welfare fund to all agents
7. Betterment of service to policy holders
8. Gratuity Calculation must be changed (to be enhanced to Rs. 25 Lakhs)
9. More benefits to empowered Agents
10. Medi claim to all agents and family members also at consessional rate of premium.
11. Direct Marketing and Bank assurance Channels to be opposed
12. Amendments in Agents Regulation
13. Club rules - business conditions to be revised
14. Anomailes in office allowance to be removed
15. Incentive to Direct agents
16. Printing and Stationery early practice maybe continued
17. Mid day meals coupons for Agents

**அனைவரும் ஒன்றுபட்டு LIAFI இயக்கத்தில் இணைந்து போராடுவோம் வெற்றி பெறுவோம்.**

Compiled by S. Natarajan, Central LIAFI ITConvener, Kindly Mail your Feedback to
E-Mail : liafi.itwing@gmail.com

Print Park, CBE
91 71 11 11 30